*செ.வெ.எண்: 23* *நாள்:12.09.2021*

**திருப்பூர் மாவட்டத்தில், நடைபெற்று வரும் 1,06,200 தடுப்பூசிகள் செலுத்த திட்டமிடப்பட்டது.**

**இலக்குக்கு மேலாக திருப்பூர் மாவட்டத்தில் மாலை 4.00 மணி நிலவரப்படி 1,07,006 தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டனர்.**

**மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போடும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டு**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் தகவல்!!!**

திருப்பூர் மாவட்டத்தில் இன்றைய தினம் கோவிட்-19 மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாமில் தடுப்பூசி போடும் பணிகளை திருப்பூர் தெற்கு வட்டம், அவிநாசி வட்டம், ஊத்துக்குளி வட்ட்த்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் இன்று (12.09.2021) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

***இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது,***

திருப்பூர் மாவட்டத்தில் கோவிட்-19 நோயின் தாக்கம் கடந்த இரண்டு அலைகளின் போதும் அதிக பாதிப்பை எற்படுத்தி உள்ளது எனவே பொதுமக்களை நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவற்களின் எண்ணிக்கை 20,77,095. இதுவரை 10,58,704 நபர்கள் முதல் தவணையும் 1,98,647 நபர்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. 10,18,391 நபர்களுக்கு முதல் தவணையும், 43,187 நபர்களுக்கு இரண்டாம் தவணை

தடுப்பூசி செலுத்தப்பட வேண்டியுள்ளது. இன்று 1,06,200 நபர்களுக்கு இந்த தடுப்பூசி வழங்க இலக்கு நிர்ணயித்து திட்டமிடப்பட்டது.

கோவிட்-19 சிறப்பு தடுப்பூசி முகாம், 631 மையங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் மற்றும் டோல்கேட்களில் கோவிட்-19 தடுப்பூசி மருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணிக்காக, 2,480 வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சித்துறை, கல்வித்துறை, வேளாண்மைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், கூட்டுறவுத்துறை, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், தன்னார்வலர்கள், பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு தேவையான அடிப்படை வசதிகள், மருத்துவக்குழுக்கள் கண்காணிப்பு குழுக்கள், ஆகியோர் தொடர் கண்காணிப்பில் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் அனைவரும் திருப்பூர் மாவட்டத்தில் முழு ஒத்துழைப்புடன் தடுப்பூசி எடுத்துக் கொண்டனர். மாலை 4.00 மணி நிலவரப்படி 1,07,006 நபர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

முகாமானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாலை 7.00 மணி வரை முகாமில் தடுப்பூசி வழங்கப்படும். இந்த மாபெரும் தடுப்பூசி முகாமில் பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்தி பயன்பெற்றுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இன்றைய தினம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், செம்பியநல்லூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி, அவிநாசி பேரூராட்சி அலுவலகம், அவிநாசி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, திருப்பூர் தெற்கு வட்டம், ஆண்டிபாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, இடுவம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஊத்துக்குளி வட்டம் மொரட்டுப்பாளையம் ஊராட்சி ஊராட்சி ஒன்றிய

துவக்கப்பள்ளி ஆகிய இடங்கிளல் மாபெரும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

*வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.*